

மன்னார்குடி தொகுதி வேட்பாளர் முனைவர் டி.ஆர்.பி.ராஜா, மன்னார்குடி மேலவாசல்,குமரபுரம், நத்தம், காரிக்கோட்டை மேலநகை உள்ளிட்ட ஊராட்சிகளில் வாக்குச் சேகரித்தார். முரசொலி எம்.பி., சித்தேரி சிவா, ஜி.பாலு,அவைதலைவர் தன்ராஜ் மதச்சார்பற்ற முற்போக்கு கூட்டணி நிர்வாகிகள் உடன் இருந்தனர்.



ஈரோடு மாவட்டம் கோபிசெட்டிப்பாளையம் சட்டமன்றத் தொகுதி மதச்சார்பற்ற முற்போக்குக் கூட்டணி கட்சிகளின் கழக வேட்பாளர் என்.நல்லசிவம் நகர மார்க்கெட் பகுதியில் பொதுமக்களிடம், உதயசூரியன் சின்னத்திற்கு வாக்குகளை சேகரித்தார். வாக்கு சேகரிப்பில் கோபி நகர மன்ற தலைவர் என்.ஆர்.நாகராஜ், வடக்கு மாவட்ட இளைஞர் அணி அமைப்பாளர் ஏ.திருவேங்கடம், உள்ளிட்ட கழக நிர்வாகிகள், கூட்டணி கட்சிகளின் நிர்வாகிகள் பலர் கலந்து கொண்டனர்.

## தி.மு.க. கூட்டணி வேட்பாளர்களை ஆதரித்து

# திராவிடர் கழகத் தலைவர் கி.வீரமணி தேர்தல் பரப்புரைப் பயணம்!



## 2026 தமிழ்நாடு சட்டமன்றத் தேர்தல்

**தி.மு.க. தலைமையிலான மதச்சார்பற்ற முற்போக்குக் கூட்டணி வேட்பாளர்களை ஆதரித்து ஆசிரியர் கி.வீரமணி அவர்கள் மேற்கொள்ளும் தேர்தல் பரப்புரைப் பயணம் வருமாறு:–**

| நாள் | நேரம் | தொகுதி | கூட்டம் நடைபெறும் இடம் | வேட்பாளர் |
|---|---|---|---|---|
| 06.04.2026 – திங்கள் | மாலை 6 மணி | இராதாபுரம் | வள்ளியூர் | **மு.அப்பாவு,** திமுக |
| | இரவு 8 மணி | திருநெல்வேலி | திருநெல்வேலி | **சு.சுப்பிரமணியன்,** திமுக |
| 07.04.2026 – செவ்வாய் | காலை 9 மணி | ஆலங்குளம் | ஆலங்குளம் | **முனைவர். பால்.மனோஜ் பாண்டியன்,** திமுக |
| | மாலை 6 மணி | திருச்சுழி | காரியாப்பட்டி | **தங்கம். தென்னரசு,** திமுக |
| | இரவு 8 மணி | மதுரை வடக்கு | மதுரை வடக்கு | **கோ.தளபதி,** திமுக |
| 08.04.2026 – புதன் | மாலை 6 மணி | கம்பம் | கம்பம் | **நா.இராமகிருஷ்ணன்,** திமுக |
| | இரவு 8 மணி | போடிநாயக்கனூர் | போடிநாயக்கனூர் | **ஓ.பன்னீர்செல்வம்,** திமுக |
| 09.04.2026 – வியாழன் | காலை 9 மணி | திண்டுக்கல் | திண்டுக்கல் | **அய்.பி.செந்தில்குமார்,** திமுக |
| | மாலை 6 மணி | திருவெறும்பூர் | திருவெறும்பூர் | **அன்பில்.மகேஸ்பொய்யாமொழி,** திமுக |
| | இரவு 8 மணி | திருச்சி மேற்கு | திருச்சி மேற்கு | **கே.என்.நேரு,** திமுக |
| 10.04.2026 – வெள்ளி | காலை 9 மணி | விராலிமலை | விராலிமலை | **கே.கே.செல்லப்பாண்டியன்,** திமுக |
| | மாலை 6 மணி | ஜெயங்கொண்டம் | ஜெயங்கொண்டம் | **க.சொ.க.கண்ணன்,** திமுக |
| | இரவு 8 மணி | குன்னம் | குன்னம் | **சா.சி.சிவசங்கர்,** திமுக |
| 11.04.2026 – சனி | மாலை 6 மணி | கிணத்துக்கடவு | கிணத்துக்கடவு | **கே.வி.கே.எஸ். சபரி கார்த்திகேயன்,** திமுக |
| | இரவு 8 மணி | சூலூர் | சூலூர் | **தளபதி முருகேசன்,** திமுக |
| 12.04.2026 – ஞாயிறு | மாலை 6 மணி | கோபிசெட்டிபாளையம் | கோபிசெட்டிபாளையம் | **என்.நல்லசிவம்,** திமுக |
| | இரவு 8 மணி | அந்தியூர் | அந்தியூர் | **எம்.சிவபாலன்,** திமுக |
| 13.04.2026 – திங்கள் | காலை 9 மணி | சேலம் வடக்கு | சேலம் வடக்கு | **இரா.இராஜேந்திரன்,** திமுக |
| | மாலை 6 மணி | பாப்பிரெட்டிபட்டி | பொம்மிடி | **முனைவர் பெ.பழனியப்பன்,** திமுக |
| | இரவு 8 மணி | பாலக்கோடு | பாலக்கோடு | **டாக்டர் டி.என்.வி.எஸ்.செந்தில்குமார்,** திமுக |
| 14.04.2026 – செவ்வாய் | மாலை 6 மணி | ஓசூர் | ஓசூர் | **எஸ்.ஏ.சத்யா,** திமுக |
| | இரவு 8 மணி | பர்கூர் | பர்கூர் | **கே.மதியழகன்,** திமுக |
| 15.04.2026 – புதன் | மாலை 6 மணி | விருகம்பாக்கம் | விருகம்பாக்கம் | **பிரபாகர் ராஜா,** திமுக |
| | இரவு 8 மணி | சைதாப்பேட்டை | சைதாப்பேட்டை | **மா.சுப்பிரமணியன்,** திமுக |
| 16.04.2026 –வியாழன் | மாலை 6 மணி | செஞ்சி | செஞ்சி | **கே.எஸ்.மஸ்தான்,** திமுக |
| | இரவு 8 மணி | திருவண்ணாமலை | திருவண்ணாமலை | **எ.வ.வேலு,** திமுக |
| 17.04.2026 – வெள்ளி | மாலை 6 மணி | நெய்வேலி | நெய்வேலி ஆர்ச் கேட் | **ச.பா.இராஜேந்திரன்,** திமுக |
| | இரவு 8 மணி | குறிஞ்சிப்பாடி | குறிஞ்சிப்பாடி | **எம்.ஆர்.கே.பன்னீர்செல்வம்,** திமுக |
| 18.04.2026 – சனி | மாலை 6 மணி | சிதம்பரம் | சிதம்பரம் | **தமிமுன் அன்சாரி,** ம.ஜ.க |
| | இரவு 8 மணி | சீர்காழி | சீர்காழி | **செந்தில்செல்வன்,** மதிமுக |
| 19.04.2026 – ஞாயிறு | காலை 9 மணி | வேதாரண்யம் | வேதாரண்யம் | **மா.மீ.புகழேந்தி,** திமுக |
| | மாலை 6 மணி | நாகப்பட்டினம் | நாகப்பட்டினம் | **பேராசிரியர் எம்.ஹெச் ஜவாஹிருல்லா,** மமக |
| | இரவு 8 மணி | திருவாரூர் | திருவாரூர் | **பூண்டி கே.கலைவாணன்,** திமுக |
| 20.04.2026 – திங்கள் | காலை 9 மணி | பேராவூரணி | பேராவூரணி | **நா.அசோக்குமார்,** திமுக |
| | மாலை 6 மணி | மன்னார்குடி | நீடமங்கலம் | **டி.ஆர்.பி. ராஜா,** திமுக |
| | இரவு 8 மணி | ஒரத்தநாடு | ஒரத்தநாடு | **ஆர்.வைத்திலிங்கம்,** திமுக |
| 21.04.2026 – செவ்வாய் | காலை 9 மணி | பாபநாசம் | கபிஸ்தலம் | **எ.எம்.ஷாஜகான்,** I.U.M.L. |
| | மாலை 4 மணி | தஞ்சாவூர் | தஞ்சாவூர் | **சண்.இராமநாதன்,** திமுக |

**கலி.பூங்குன்றன்**
துணைத் தலைவர், திராவிடர் கழகம்

## தி.மு.க. கூட்டணி வேட்பாளர்களை ஆதரித்து

# ம.தி.மு.க. பொதுச் செயலாளர் வைகோ தேர்தல் பரப்புரைப் பயணம்!



**06.04.2026 திங்கள்**

மாலை 4 மணி இரவு 10 மணி வரை
கடையநல்லூர் – மதிமுக
(இரவு தங்கல் – கலிங்கப்பட்டி)

**07.04.2026 செவ்வாய்**

கலிங்கப்பட்டியில் இருந்து புறப்படுதல்
மாலை 4 மணி முதல் இரவு 10 மணி வரை
கோவில்பட்டி – திமுக
சாத்தூர் – திமுக
விருதுநகர் – தேமுதிக
(இரவு தங்கல் மதுரை)

**08.04.2026 புதன்**

மாலை 4 மணி முதல் இரவு 10 மணி வரை
மதுரை தெற்கு – மதிமுக
(இரவு தங்கல் மதுரை)

**09.04.2026 வியாழன்**

மதுரையில் இருந்து புறப்படுதல்.
மாலை 4 மணி முதல் இரவு 10 மணி வரை
மொடக்குறிச்சி – மதிமுக
(இரவு தங்கல் ஈரோடு.)

**10.04.2026 வெள்ளி**

ஈரோட்டில் இருந்து புறப்படுதல்.
மாலை 4 மணி முதல் இரவு 10 மணி வரை
சீர்காழி – மதிமுக
(இரவு தங்கல் மயிலாடுதுறை)

**11.04.2026 சனி**

மயிலாடுதுறையில் இருந்து புறப்படுதல்
மாலை 4 மணி முதல் இரவு 10 மணி வரை
காட்டுமன்னார்கோயில் – விடுதலை சிறுத்தைகள்
திருவிடைமருதூர் – திமுக
நன்னிலம் – எஸ்.டி.பி.ஐ
நாகபட்டினம் – மனிதநேய மக்கள் கட்சி
(இரவு தங்கல் வேதாரண்யம்)

**12.04.2026 ஞாயிறு**

வேதாரண்யத்தில் இருந்து புறப்படுதல்.
மாலை 4 மணி முதல் இரவு 10 மணி வரை
பாபநாசம் – இந்திய யூனியன் முஸ்லிம் லீக்
திருவெறும்பூர் – திமுக
திருச்சி மேற்கு – திமுக
(இரவு தங்கல் திருச்சி)

**13.04.2026 திங்கள்**

மாலை 4 மணி முதல் இரவு 10 மணி வரை
கந்தர்வக்கோட்டை – சிபிஎம்
சிவகங்கை – முக்குலத்தோர் புலிப்படை
மதுரை வடக்கு – திமுக
மதுரை தெற்கு – மதிமுக
(இரவு தங்கல் மதுரை)

**14.04.2026 செவ்வாய்**

மதுரையில் இருந்து புறப்படுதல்.
மாலை 4 மணி முதல் இரவு 10 மணி வரை
பொள்ளாச்சி – கொங்குநாடு மக்கள் தேசிய கட்சி
மொடக்குறிச்சி – மதிமுக
(இரவு தங்கல் ஈரோடு)

**15.04.2026 புதன்**

ஈரோட்டில் இருந்து புறப்படுதல்
மாலை 4 மணி முதல் இரவு 10 மணி வரை
சீர்காழி – மதிமுக
(இரவு தங்கல் கும்பகோணம்)

**16.04.2026 வியாழன்**

கும்பகோணத்தில் இருந்து புறப்படுதல்.
மாலை 4 மணி முதல் இரவு 10 மணி வரை
ஸ்ரீவில்லிப்புத்தூர் – சிபிஐ
வாசுதேவநல்லூர் – திமுக
கடையநல்லூர் – மதிமுக
(இரவு தங்கல் கலிங்கப்பட்டி)

**17.04.2026 வெள்ளி**

கலிங்கப்பட்டியில் இருந்து புறப்படுதல்.
மாலை 4 மணி முதல் இரவு 10 மணி வரை
சீர்காழி – மதிமுக
(இரவு தங்கல் சீர்காழி)

**18.04.2026 சனி**

சீர்காழியில் இருந்து புறப்படுதல்.
மாலை 4 மணி முதல் இரவு 10 மணி வரை
திருச்செங்கோடு – கொங்குநாடு மக்கள் தேசிய கட்சி
மொடக்குறிச்சி – மதிமுக
(இரவு தங்கல் ஈரோடு)

**19.04.2026 ஞாயிறு**

ஈரோட்டில் இருந்து புறப்படுதல்
மாலை 4 மணி முதல் இரவு 10 மணி வரை
திருநெல்வேலி – திமுக
பாளையங்கோட்டை – திமுக
மேலப்பாளையம்
(இரவு தங்கல் – திருநெல்வேலி)

**20.04.2026 திங்கள்**

திருநெல்வேலியில் இருந்து புறப்படுதல்.
மாலை 4 மணி முதல் இரவு 10 மணி வரை
கடையநல்லூர் – மதிமுக
(இரவு தங்கல் கலிங்கப்பட்டி)

**21.04.2026 செவ்வாய்**

கலிங்கப்பட்டியில் இருந்து புறப்படுதல்.
மதுரை தெற்கு – மதிமுக

(பரப்புரை பயணம் நிறைவு)

குறிப்பு :
1. கழகப் பொதுச்செயலாளரின் தேர்தல் பரப்புரை வாகனத்தில் மட்டுமே.
2. மாலை 4 மணி முதல் இரவு 10 மணி வரை மட்டுமே பரப்புரை நிகழ்ச்சி ஏற்பாடு செய்யப்பட வேண்டும்.

பொதுச்செயலாளரின் தேர்தல் பரப்புரை பயண ஒருங்கிணைப்பாளர்
சு.ஜீவன், உயர்நிலைக்குழு உறுப்பினர், அலைபேசி எண் : 81488 98063

**'தாயகம்'**
சென்னை - 8
நாள்- 01.04.2026

**தலைமைக் கழகம்**
மறுமலர்ச்சி தி.மு.க.

## கடலூர் மாவட்டத்திலுள்ள 9 சட்டமன்றத் தொகுதிகளில் மதச்சார்பற்ற முற்போக்குக் கூட்டணி கட்சிகளின் சார்பில் போட்டியிடும் வேட்பாளர்களை அறிமுகம் செய்து, ஆதரித்து

# முதலமைச்சர், கழகத் தலைவர் மு.க.ஸ்டாலின் தேர்தல் பொதுக்கூட்டத்தில் சிறப்புரை!

## மாவட்டச் செயலாளர் - அமைச்சர் எம்.ஆர்.கே.பன்னீர்செல்வம் வேண்டுகோள்!



*கடலூர்,ஏப்.4-*

*தமிழ்நாடு முதலமைச்சர், கழகத் தலைவர் அவர்கள் வருகின்ற (07.04.2026 செவ்வாய்க்கிழமை) காலை 08.00 மணியளவில், கடலூர் மஞ்சக்குப்பம் மைதானத்தில் கடலூர் மாவட்டத்திலுள்ள காட்டுமன்னார்கோயில், குறிஞ்சிப்பாடி, புவனகிரி, சிதம்பரம், கடலூர், திட்டக்குடி, விருதாச்சலம், நெய்வேலி, பண்ருட்டி ஆகிய ஒன்பது சட்டமன்ற தொகுதிகளில் போட்டியிடும் மதசார்பற்ற முற்போக்கு கூட்டணி கட்சிகளின் வெற்றி வேட்பாளர்களை அறிமுகம் செய்து வைத்து, அவர்களை ஆதரித்து நடைபெறும் சட்டமன்ற தேர்தல் பொதுக்கூட்டத்தில் சிறப்புரையாற்ற உள்ளார்.*

*அதுசமயம் இக்கூட்டத்தில் கடலூர் மாவட்டத்தை சேர்ந்த மதச்சார்பற்ற முற்போக்கு கூட்டணி கட்சிகளின் மாநில, மாவட்டக் கழக நிர்வாகிகள், மாநகர, ஒன்றிய, நகர, பகுதி, பேரூர், ஊராட்சி மற்றும் கிளை, வார்டு கழகச் செயலாளர்கள், பிரதிநிதிகள் மற்றும் நிர்வாகிகள், முன்னாள், இந்நாள் சட்டமன்ற, நாடாளுமன்ற உறுப்பினர்கள், தலைமை செயற்குழு, பொதுக்குழு உறுப்பினர்கள், தலைமைக் கழக சட்டமன்றத் தொகுதி பார்வையாளர்கள், மாவட்டக் கழக தொகுதி பார்வையாளர்கள், முன்னாள், இந்நாள் உள்ளாட்சிப் பிரதிநிதிகள், மாநகர மேயர், மண்டல குழு தலைவர்கள், நகராட்சி, பேரூராட்சி மன்ற தலைவர்கள், துணைத் தலைவர்கள் மற்றும் மாநகராட்சி, நகராட்சி, பேரூராட்சி மன்ற உறுப்பினர்கள் மற்றும் முன்னாள் ஊராட்சி ஒன்றியக்குழு தலைவர்கள், ஊராட்சி மன்றத் தலைவர், துணைத் தலைவர்கள், முன்னாள் மாவட்டக்குழு, ஒன்றியக்குழு ஊராட்சி மன்ற உறுப்பினர்கள், மாவட்ட, மாநகர, ஒன்றிய, நகர, பகுதி, பேரூர், வட்டம், வார்டு, பூத் கழக இளைஞரணி மற்றும் மாணவரணி, மகளிரணி, மகளிர் தொண்டரணி, வழக்கறிஞர் அணி, விவசாய அணி, விவசாய தொழிலாளர் அணி, இலக்கிய அணி, கலை இலக்கிய பகுத்தறிவு பேரவை, தொண்டரணி, தொழிலாளர் அணி, மீனவரணி, நெசவாளர் அணி, பொறியாளர் அணி, மருத்துவர் அணி, வர்த்தகர் அணி, ஆதிதிராவிடர் நலக்குழு அணி, சிறுபான்மையினர் நல உரிமை பிரிவு, தகவல் தொழில் நுட்ப அணி, சுற்றுச்சூழல் அணி, அயலக அணி, விளையாட்டு மேம்பாட்டு அணி, அமைப்புசாரா ஓட்டுநர் அணி மற்றும் தொழிலாளர் முன்னேற்றச்சங்கம் ஆகிய அணிகளின் நிர்வாகிகள், கழக முன்னோடிகள், வாக்குச்சாவடி நிலைக்குழு முகவர்கள் (BLA2), பூத் கமிட்டி உறுப்பினர்கள் (BLC), பூத் டிஜிட்டல் ஏஜென்ட்கள்(BDA), ஸ்டாலினின் மகளிர் படையினர்கள், கழக தோழர்கள், மதச்சார்பற்ற முற்போக்கு கூட்டணி கட்சிகளின் நிர்வாகிகள் மற்றும் தோழர்கள், பொதுமக்கள் அனைவரும் பெருந்திரளாக கலந்து கொள்ளுமாறு அன்புடன் கேட்டுக் கொள்கிறேன்.*

**அமைச்சர் எம்.ஆர்.கே.பன்னீர்செல்வம்**
**செயலாளர்,**
**கடலூர் கிழக்கு மாவட்ட தி.மு.க**



நடைபெற இருக்கின்ற தமிழ்நாடு சட்டமன்ற தேர்தல் சம்பந்தமான மதச்சார்பற்ற கூட்டணி கட்சி நிர்வாகிகளின் ஆலோசனைக் கூட்டம் கோபி சட்டமன்ற தொகுதி கழக பொறுப்பாளர் வி.சி. சந்திரகுமார் தலைமையில் நடைபெற்றது. இதில் கழக நிர்வாகிகளுடன் சேர்ந்து கூட்டணி கட்சி நிர்வாகிகள் தேர்தல் களப்பணிகள் ஆற்றுவது குறித்து ஆலோசனைகள் வழங்கி சிறப்புரையாற்றினார். இக்கூட்டத்தில் கோபி சட்டமன்றத் தொகுதி மதசார்பற்ற கூட்டணி கட்சிகளின் கழக வேட்பாளர் என்.நல்லசிவம் தேர்தல் களப்பணிகள் குறித்து பேசினார். கூட்டத்தில் கழக நிர்வாகிகள், கூட்டணி கட்சிகளின் நிர்வாகிகள் பலர் கலந்து கொண்டனர்.



புதுக்கோட்டை மாவட்டம், திருமயம் சட்டமன்றத் தொகுதி, திருமயம் வடக்கு, தெற்கு ஒன்றியங்கள் சார்பில் திருமயத்தில் நடைபெற்ற மதச்சார்பற்ற முற்போக்குக் கூட்டணி கட்சி செயல்வீரர்கள் கூட்டத்தில் புதுக்கோட்டை தெற்கு மாவட்டச் செயலாளர், திருமயம் தொகுதி கழக வெற்றி வேட்பாளர் அமைச்சர் எஸ். ரகுபதி வாக்குகள் கேட்டு சிறப்புரையாற்றினார். உடன் மாநில மருத்துவர் அணி துணைச் செயலாளர் எஸ்.ஆர்.அண்ணாமலை ரகுபதி, திருமயம் தொகுதி பொறுப்பாளர் முத்துக்குமார், ஏ.எல்.சுப்பிரமணியன், ஒன்றிய கழக செயலாளர்கள் அழகு சிதம்பரம், இரா.கணேசன், முன்னாள் சட்டப்பேரவை உறுப்பினர் இராம.சுப்புராம், காங்கிரஸ் தெற்கு மாவட்ட தலைவர் மணிகண்டன் மற்றும் மதச்சார்பற்ற முற்போக்குக் கூட்டணி நிர்வாகிகள் உள்ளனர்.

# சட்டப்பேரவைப் பொதுத்தேர்தல் 2026

## தி.மு.க. தலைமையிலான

## மதச்சார்பற்ற முற்போக்குக் கூட்டணிக் கட்சி வேட்பாளர்களை ஆதரித்து



கழக துணைப் பொதுச்செயலாளர் **கனிமொழி கருணாநிதி** எம்.பி. அவர்களின்

# தேர்தல் பிரச்சாரச் சுற்றுப்பயணம்

## தலைமைக் கழக அறிவிப்பு!

| தேதி | நேரம் | மாவட்டம் | சட்டமன்றத் தொகுதி |
|---|---|---|---|
| 4.4.2026 | காலை 11.00 மணி | திருச்சி தெற்கு | மணப்பாறை |
| ” | மாலை 4.00 மணி | திருச்சி மத்திய | திருவரங்கம் |
| ” | மாலை 6.00 மணி | கரூர் | குளித்தலை |
| ” | இரவு 8.00 மணி | ” | கிருஷ்ணராயபுரம் |
| 5.4.2026 | காலை 11.00 மணி | திருப்பூர் கிழக்கு | காங்கேயம் |
| ” | மாலை 4.00 மணி | திருப்பூர் மத்திய | பல்லடம் |
| ” | மாலை 6.00 மணி | கோவை தெற்கு | சூலூர் |
| 5.4.2026 | இரவு 8.00 மணி | கோவை வடக்கு | கவுண்டம்பாளையம் |
| 6.4.2026 | மாலை 4.00 மணி | சென்னை தெற்கு | மதுரவாயல் |
| ” | மாலை 5.00 மணி | சென்னை கிழக்கு | அம்பத்தூர் |
| ” | மாலை 6.00 மணி | சென்னை வடகிழக்கு | மாதவரம் |
| ” | மாலை 7.00 மணி | சென்னை வடகிழக்கு | திருவொற்றியூர் |
| ” | இரவு 8.00 மணி | சென்னை கிழக்கு | திரு.வி.க.நகர் |
| 7.4.2026 | காலை 10.00 மணி | திருவள்ளூர் மேற்கு | திருத்தணி |
| ” | பகல் 12.00 மணி | இராணிப்பேட்டை | சோளிங்கர் |
| ” | மாலை 4.00 மணி | திருவண்ணாமலை வடக்கு | ஆரணி |
| ” | மாலை 6.00 மணி | திருவண்ணாமலை தெற்கு | போளூர் |
| ” | இரவு 8.00 மணி | ” | கலசப்பாக்கம் |
| 8.4.2026 | காலை 10.00 மணி | கள்ளக்குறிச்சி தெற்கு | ரிஷிவந்தியம் |
| ” | பகல் 12.00 மணி | கள்ளக்குறிச்சி வடக்கு | சங்கராபுரம் |
| ” | மாலை 4.00 மணி | சேலம் கிழக்கு | ஆத்தூர் |
| ” | மாலை 6.00 மணி | சேலம் மத்திய | சேலம் தெற்கு |
| ” | இரவு 8.00 மணி | ” | சேலம் மேற்கு |
| 9.4.2026 | காலை 10.00 மணி | நாமக்கல் கிழக்கு | நாமக்கல் |
| ” | பகல் 12.00 மணி | நாமக்கல் மேற்கு | குமாரபாளையம் |
| ” | மாலை 4.00 மணி | ஈரோடு மத்திய | பவானி |
| ” | மாலை 6.00 மணி | ஈரோடு தெற்கு | ஈரோடு கிழக்கு |
| ” | மாலை 7.00 மணி | ஈரோடு தெற்கு | மொடக்குறிச்சி |

"அண்ணா அறிவாலயம்"
சென்னை - 600 018
நாள்- 31.03.2026

**தலைமைக் கழகம்**
தி.மு.க.



திருவெறும்பூர் தெற்கு ஒன்றியத்திற்கு உட்பட்ட HAPP மெயின் கேட் பகுதியில் தனது பயணத்தை கழக வேட்பாளர் அமைச்சர் அன்பில் மகேஸ் பொய்யாமொழி ஆரம்பித்தார். அங்கு பணிக்குச் சென்று கொண்டிருந்த தொழிற்சாலைத் தொழிலாளர்களை நேரில் சந்தித்து, துண்டுப் பிரசுரங்களை வழங்கி வாக்குச் சேகரித்தார்.



திருப்பூர் கிழக்கு மாவட்டம், காங்கேயத்தில் மாவட்ட கழக செயலாளர் இல.பத்மநாபன் தலைமையில் மதச்சார்பற்ற முற்போக்கு கூட்டணியின் காங்கேயம் சட்டமன்ற தேர்தல் பணிமனையை கழக வேட்பாளர், கழக துணை பொதுச் செயலாளர், அமைச்சர் மு.பெ.சாமிநாதன் திறந்து வைத்தார். இதில் கழக மகளிர் அணி துணைச் செயலாளர், அமைச்சர் என்.கயல்விழி செல்வராஜ், கழக இளைஞர் அணி துணை செயலாளர் கே.இ.பிரகாஷ் எம்.பி., உள்பட மதச்சார்பற்ற முற்போக்குக் கூட்டணி கட்சி மாவட்ட தலைவர்கள், செயலாளர்கள், நிர்வாகிகள், பிரதிநிதிகள், திருப்பூர் கிழக்கு மாவட்ட கழக நிர்வாகிகள், ஒன்றிய, நகர, பேரூர் கழக செயலாளர்கள், இந்நாள், முன்னாள் மக்கள் பிரதிநிதிகள், கழக சார்பு அணிகளின் அமைப்பாளர்கள், துணை அமைப்பாளர்கள் பலர் கலந்து கொண்டனர்.

# பெரம்பலூர் சட்டமன்றத் தொகுதி கழக வேட்பாளர் ச.த.ஜெயலெட்சுமி அறிமுகக் கூட்டம்!

## கழக துணைப் பொதுச்செயலாளர் ஆ.இராசா.எம்.பி. உரையாற்றினார்!

பெரம்பலூர்,ஏப்,4-

பெரம்பலூர் சட்டமன்றத் தொகுதி தி.மு.க. வேட்பாளர் அறிமுகக் கூட்டம், பெரம்பலூர் அரியலூர் சாலையில் உள்ள பூ மணம் தனியார் திருமண மண்டபத்தில் நடைபெற்றது.

மாவட்ட கழக பொறுப்பாளர் வீ.ஜெகதீசன் தலைமையில், நடைபெற்ற கூட்டத்தில், கழக துணைப் பொதுச்செயலாளர் மேனாள் ஒன்றிய அமைச்சர் ஆ.இராசா.எம்.பி., அமைச்சர் சா.சி. சிவசங்கர், பெரம்பலூர் பாராளுமன்ற உறுப்பினர் கே.என். அருண் நேரு ஆகியோர் கலந்து கொண்டு பெரம்பலூர் சட்டமன்றத் தொகுதி தி.மு.க. வேட்பாளர் மருத்துவர் ச.த. ஜெயலட்சுமியை அறிமுகம் செய்து வைத்து தி.மு.க.வின் சாதனைகளை எடுத்துரைத்து, தேர்தல் களத்தில் எவ்வாறு செயல்பட வேண்டும், மக்களை நேரில் சந்தித்து பிரச்சாரம் செய்து வாக்குகள் முழுவதும் தி.மு.க.வுக்கு சேகரிக்க வேண்டும், அதற்கு கூட்டணி கட்சி நிர்வாகிகள், தொண்டர்கள் ஒத்துழைப்பு வழங்க வேண்டும் என்றும் ஒரு லட்சம் வாக்குகள் வித்தியாசத்தில் வெற்றி செய்வது எனவும் பேசினார்கள்.

இதில் சட்டமன்ற உறுப்பினர் எம்.பிரபாகரன், தொகுதி பார்வையாளர்கள் தங்க. சித்தார்த்தன், ஏ.கே. அருண், மாநில ஆதிதிராவிடர் நலக்குழு துணைச் செயலாளர் பா.துரைசாமி, மாநில வர்த்தக அணி துணை செயலாளர் குன்னம் சி. இராஜேந்திரன், மாநில பொறியாளர் அணி துணைச் செயலாளர் இரா.ப.பரமேஷ்குமார், தலைமைச் செயற்குழு உறுப்பினர்கள் மு.அட்சய கோபால், வழக்கறிஞர் என். ராஜேந்திரன், மாவட்ட துணைச் செயலாளர்கள் தழுதாழை பாஸ்கர், நூருல்ஹிதா இஸ்மாயில், சன்.சம்பத், மாவட்ட பொருளாளர் செ.ரவிச்சந்திரன், ஒன்றிய கழக பொறுப்பாளர்கள் என்.கிருஷ்டமூர்த்தி, எம். இராஜ்குமார், செ. நல்லதம்பி, தி.மதியழகன், சி.ராஜேந்திரன், ஒன்றிய கழக பொறுப்பாளர்கள் டாக்டர் செ.வல்லபன், ந.ஜெகதீஷ்வரன், அழகு.நீலமேகம், மாவட்ட இளைஞர் அணி அமைப்பாளர் து. ஆதவன், துணை அமைப்பாளர்கள் அ.அப்துல்கரீம், வ. சுப்ரமணியன், டி.ஆர்.சிவசங்கர், ஆர். அருண், மா.பிரபாகரன், மாவட்ட மாணவர் அணி அமைப்பாளர் தங்க. கமல், மாவட்ட பொறியாளர் அணி அமைப்பாளர் தி.இராசா உள்ளிட்ட கழக நிர்வாகிகள் மற்றும் காங்கிரஸ், ம.தி.மு.க., தே.மு.தி.க., விடுதலை சிறுத்தைகள், இந்திய கம்யூனிஸ்ட், மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் உள்ளிட்ட கூட்டணிக் கட்சி நிர்வாகிகள், தொண்டர்கள் ஏராளமானோர் கலந்து கொண்டனர்.

## சட்டப்பேரவை பொதுத்தேர்தல் - 2026

# தொகுதிப் பார்வையாளர்கள் நியமனம்!

(மூன்றாவது பட்டியல்)

## தலைமைக் கழகம் அறிவிப்பு!

நடைபெற உள்ள சட்டமன்றத் தேர்தல் பணிகளை ஒருங்கிணைக்கும் வகையில் முதற்கட்டமாக கீழ்கண்டவாறு சட்டமன்றத் தொகுதிகளின் பார்வையாளர்கள் தலைமைக் கழகத்தால் நியமிக்கப்படுகிறார்கள்.

கழக நிர்வாகிகள் மற்றும் தோழர்கள் முழு ஒத்துழைப்பு வழங்கிட வேண்டுமென கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள்.

| சட்டமன்றத் தொகுதி | - பார்வையாளர் |
|---|---|
| தூத்துக்குடி, கோவில்பட்டி | – பொன்.முத்துராமலிங்கம் |
| திருக்கோயிலூர் | – சிவ.ஜெயராஜ் |
| ஜெயங்கொண்டம் | – கன்னிகை ஸ்டாலின் |
| பட்டுக்கோட்டை | – என்.வி.காமராஜ் |
| பேராவூரணி | – ஏனாதி பாலு |
| பாபநாசம் | – ரங்கசாமி, சாகுல்அமீது |
| பவானி | – கோ.வெ.குமணன் |
| திரு வி.க.நகர் | – பிரியா ராஜன் |
| செஞ்சி | – டி.ஏ.மணிவண்ணன் |
| மன்னார்குடி | – வழக்கறிஞர் கண்ணதாசன் |
| இராயபுரம் | – காசிமுத்துமாணிக்கம் |
| சேலம் தெற்கு | – சரவணன் (நெசவாளர் அணி) |
| கடையநல்லூர் | – மாலைராஜா |

குறிப்பு: ஏற்கனவே தொகுதி பார்வையாளர்களாக நியமிக்கப்பட்டவர்களுடன் இவர்கள் இணைந்து பணியாற்றுவார்கள்.


"அண்ணா அறிவாலயம்"
சென்னை - 18
நாள்- 02.04.2026

**தலைமைக் கழகம்**
தி.மு.க.

# திராவிட இயக்க தீரர்கள் நினைவு நாள்

## சாத்தான்குளம் அ. மகாராசன்

ஏப்ரல் 4 (2012)



திராவிடர் கழகத்திலிருந்து விலகி, கழகம் துவங்கியதும், அதில் தன்னை இணைத்துக் கொண்டு கழகப் பணியாற்றியவர்.

1957 முதல் திருச்செந்தூர் வட்ட துணைச் செயலாளராகவும், சாத்தான்குளம் பேரூர்ச் செயலாளராகவும், தொடர்ந்து 20 ஆண்டுகளுக்கு மேலாக சாத்தான்குளம் ஒன்றியச் செயலாளராகவும், மேலும் தூத்துக்குடி மாவட்ட துணைச் செயலாளராகவும் பொறுப்பு வகித்து கழகப் பணியாற்றியவர்.

மும்முனைப் போராட்டம் முதல் கழகம் அறிவித்த அனைத்துப் போராட்டங்களிலும் பங்கேற்று சிறை சென்றவர். நெருக்கடிகால மிசா சட்டத்தின்கீழ் கைது செய்யப்பட்டு சிறை சென்றவர்.

**தலைமைக் கழகம்**
தி.மு.க.